16 ஆம் நாள் நினைவு அஞ்சலி
மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி

தோற்றம் : 04.11.1974 மறைவு : 28.09.2026

நாள் : 13.10.2026 செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணியளவில்
இடம் : புது தெரு, இலாயிட்ஸ் ரோடு, சென்னை – 05.



121 அ வட்ட செயலாளர்
சீ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

திருஉருவப்படத்தை திறந்து வைப்பவர்

மயிலை த.வேலு B.A., LL.B., EX.MLA.
சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர்

அன்பகம் கலை
கழக இணை அமைப்பு செயலாளர்

நந்தனம் கி.மதி MC.
மயிலை மேற்கு பகுதி செயலாளர்

எஸ்.முரளி
மயிலை கிழக்கு பகுதி செயலாளர்

மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள்
மற்றும் மாவட்ட – பகுதி– வட்ட அனைத்து அணிகளைச் சார்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்
கலந்து கொள்வார்கள்

சென்னை தென்மேற்கு மாவட்டம் – மயிலை மேற்கு பகுதி
121 அ வட்ட தி.மு.க

ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சுகாதாரச் சீர்கேடுகள்!

சென்னை, அக். 13 - சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சுகாதார சீர்கேடு கள் நிலவு வதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

வடசென்னையின் முக் கிய அரசு மருத்துவமனைக ளில் ஒன்றான ஸ்டான்லி மருத்துவமனைக்கு நாள் தோறும் ஆயிரக்கணக்கா னோர் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். அண்மைக் காலமாக இந்த மருத்துவம னையில் பாராமரிப்புப் பணிகள் முறையாக நடை பெறுவதில்லை.

ம ரு த் து வ ம னை யி ல் உள்ள மருந்துகள் வழங்குமி டம், மற்றும் உணவகத்தின் அருகே கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி களில் துர்நாற்றம் வீசுகிறது.

உடல் உறுப்பு பிரிவு செயல்படும் பகுதி யிலும் கழிவுநீர் தேங்கி சுகா தார சீர்கேடு ஏற்பட்டுள் ளது. மேலும், மருத்துவம னையைச் சுற்றியுள்ள கழிவறை களில் தண்ணீர் வராததால் நோயாளிகளும் பொதுமக்களும் மிகுந்த சிர மத்திற்கு உள்ளாகின்றனர்.

மேலும் மருத்துவ மனைக்கு சிகிச்சைக் காக வரும் நோயாளி களிடம் அங்கு பணிபுரியும் ஊழியர் கள் பணம் கேட்பதாகவும் குறிப்பாக அங்கு பணிபுரி யும் சிலர், தாங்களை த. வெ.க. உறுப்பினர்கள் எனக் கூறிக்கொண்டு, நோயாளிக ளிடம் பணம் பறிக்க முயல் வதாகவும், இது குறித்து சம் பந்தப்பட்ட அதிகாரியிடம் பலமுறை புகார் தெரிவித் தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என் றும் நோயாளிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் மற்றும் அதிகாரி கள் நேரில் ஆய்வு மேற் கொண்டு உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(11.10.2026)



1. திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே சொத்துத் தகராறு காரணமாக, மதுவை ஊற்றிக் கொடுத்து விவசாயி வெட்டிக்கொலை ...

2. திண்டுக்கல் மாவட்டம் வடுகபாளையம் அருகே தூங்கிக் கொண்டிருந்த பெண்ணின் தலையில் அம்மிக்கல்லை போட்டு கொலை ....

3. கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரம் அருகே காதல் தொல்லையால் பெண் தற்கொலை செய்து கொண்டதால், ஆத்திரத்தில் வாலிபர் அடித்து கொலை.

4. திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே முன்விரோதம் காரணமாக விவசாயியை அடித்துக் கொலை செய்து கிணற்றில் வீசிய மர்ம ஆசாமிகள் ...

5. செங்கல்பட்டு அருகே ரவுடி ஓட்டி வந்த கார் மோதி பணியிலிருந்த போலீஸ்காரர் பலி ...



6. புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அருகே பிடாரம் பட்டியில் அரசு பள்ளியில் படிக்கும் 13 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் சிக்கினார் ...

7. சென்னை கொடுங்கையூர் கிருஷ்ணமூர்த்தி நகரில் இரும்பு கடை பூட்டை உடைத்து பணம் மற்றும் இரும்பு கொள்ளை ...

8. சென்னை ஓட்டேரியில் தனியார் நிறுவன ஊழியர் வீட்டு பூட்டை உடைத்து 70 ஆயிரம் ரூபாய் கொள்ளை ...

9. சென்னை வேளச்சேரி அடுத்த கோவிலம்பாக்கத்தில் தனியார் மருத்துவமனை ஊழியர் வீட்டில் 10 சவரன் நகை, 30 ஆயிரம் பணம் திருட்டு...



10. கோவை மாவட்டம் சூலூர் காவல் நிலையத்தில் குடும்பத் தகராறு விசாரித்த தலைமைக் காவலர் மற்றும் பெண் போலீசார் மீது சரமாரியாக தாக்குதல் ...

11. நெல்லை மாவட்டம் மூலக்கரை பட்டி அருகே விவசாயி வீட்டில் பெட்ரோல் குண்டு வீச்சு ...

12. திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் அருகே அரசு பேருந்தில் தடை செய்யப்பட்ட குட்கா போதைப் பொருளை கடத்தி விற்பனை செய்து வந்த கண்டக்டர் சிக்கினார் ...

13. சென்னை திருவொற்றியூர் அருகே ரயிலில் கடத்த முற்பட்ட 500 கிலோ ரேஷன் அரிசி சிக்கியது ...



14. பெரம்பலூர் மாவட்டம் குன்னம் பெரியம்மாபாளையத்தில் ஆசிரியர் ஓட, ஓட விரட்டி கழுத்தறுத்து படுகொலை.

15. திருவாரூர் அருகே, வரதட்சணை கேட்டு குழந்தைகளுடன் மனைவியை வீட்டிற்குள் வைத்து பூட்டிவிட்டு சென்ற கணவர். தங்களை காப்பாற்றுமாறு தகவல் அளித்தும் சிங்கப்பெண் படை வரவில்லை என பாதிக்கப்பட்ட பெண் வீடியோ வெளியிட்டதால் பரபரப்பு.

16. திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் நள்ளிரவில் 4 மணிநேரம் தொடர் மின்வெட்டால் இரவு முழுவதும் தூங்காமல் தவித்த மக்கள் மின்வாரியத்தைக் கண்டித்து சாலை மறியல் போராட்டம்.

யு.பி.ஐ. கட்டணத்துக்கு எதிராக பேட்ஜ் அணிந்து வணிகர்கள் போராட்டம்!

சென்னை, அக் 13- யுபிஐ சேவை கட்டண விதிப்பை எதிர்த்து தமிழ கம் முழுவதும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேர மைப்பு சார்பில் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய அரசு டிஜிட்டல் மயமாக்கல் கொள்கையின் படி, வங்கி பணபரிவர்த்த னைகளை இலவச யுபிஐ ப ண ப ரி வ ர் த் த னை க் கு மாற்றி, பொது மக்களி டையே டிஜிட்டல் மயமாக் கலை ஊக்கப்படுத்தி வந் தது. இதை பெருவாரியான மக்கள் பயன்படுத்தி வரும் நிலையில், ரூ.2 ஆயிரத் துக்கு மேல் உள்ள யுபிஐ ப ண ப ரி வ ர் த் த னை க் கு அக்டோபர் 15 முதல் 0.4 சத வீதம் சேவை கட்டணம் விதிப்பதாகவும், அச்சேவை கட்டண விதிப்பை வணிகர் கள் தான் செலுத்த வேண் டும் மத்திய அரசு தெரிவித் துள்ளது.

இதற்கு அகில இந்திய அளவில் மிகப் பெரும் எதிர்ப்பு உருவாகி இருக் கின்றது. இதை கண்டித்து தமிழ்நாடு வணிகர் சங்கங்க ளின் பேரமைப்பு சார்பில், எதிர்ப்பு பேட்ஜ் அணிந்து வியாபாரத்தில் ஈடுபடும் அ ற ப் போ ர ா ட் ட ம் சென்னை சிந்தாதிரிப் பேட்டை சந்தையில் நடை பெற்றது.

இதில் பேரமைப்பின் தலைவர் விக்கிரமராஜா பங்கேற்று, யுபிஐ பரிவர்த்த னைக்கு சேவைக் கட்டண விதிப்பு எதிர்ப்பு பேட்ஜை வியாபாரிகளுக்கு வழங்கி, அறவழிப் போராட்டத்தை தொடங்கி வைத்தார். இதே போல் தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெற் றது.

பின்னர் செய்தியாளர்க ளிடம் பேசிய விக்கிரம ராஜா, "அமெரிக்கா ஈரான் வளைகுடா போர் பதற்றம் காரணமாக பெட்ரோல், டீசல், எரிபொருட்கள் விலை மிகப் பெரும் உயர்வை சந்தித்திருக்கின் றது. இந்த எரிபொருள் உயர்வால், பெருமளவு போக்குவரத்து கட்டணங் கள் உயர்ந்து, மக்கள் அன் றாட பயன்படுத்தும் பொருட்கள் விலையேற்றம் கண்டிருக்கின்றது.

இந்தச் சூழலில் வணிகர் கள் மீது திணிக்கப்பட்டுள்ள யுபிஐ சேவை கட்டணமும், மேலும் விலைவாசி உயர் வுக்கு வழிவகுக்கும் என்ற அச்சம் வணிகர்களிடையே நிலவுகின்றது.


யுபிஐ சேவை கட்ட ணத்தை மத்திய அரசு தொலைநோக்கு சிந்தனை யுடன் ரத்து செய்யவேண் டும் என, தமிழ்நாடு வணி கர் சங்கங்களின் பேரமைப் பின், தமிழகத்தில் அமைப்பு ரீதியாக உள்ள 61 மாவட் டங்களில் மாவட்ட தலை வர்கள் தலைமையில் முக் கிய நகர் பகுதிகளில் வணி கர்கள் அனைவரும் ஒன்று கூடி யுபிஐ சேவை கட்டண விதிப்பு எதிர்ப்பு பேட்ஜ் அணிந்தும், தங்கள் வணிக நிறுவனங்கள் மற்றும் கடை களில் விளம்பரத்தட்டிகள் வைத்தும், மத்திய அரசை வலியுறுத்தி, தமிழகம் முழு வதும் வணிகர்கள் ஒன்று பட்டு முதற்கட்ட அறவ ழிப்போராட்டம் நடத்தி இருக்கிறோம்.

இதில் பேரமைப்பின் மாநில தலைமைச் செயலா ளர் ஆர்.ராஜ்குமார், மாநில கூடுதல் செயலாளர் வி.பி. மணி, மாநிலத் துணைத் தலைவர் எம்.எஸ்.பஷீர் அகமது, மத்திய சென்னை மாவட்டத் தலைவர் எஸ். சாமுவேல், செயலாளர் ஏ.ஷேக்முகைதீன், பொரு ளாளர் ஏ.சத்தியசீகன் உள் ளிட்டோர் கலந்துகொண் டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பா. மனோகரன்

அக்டோபர் 13 (2020)



1986ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பொறுப்புகளை வகித்தவர்.

1989ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அத்தொகுதிக்கு பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தலைமைச் செயலகத்தில் மின் தடை - இருட்டு அறையில் அமைச்சர்கள்!

சென்னை, அக். 13- தலைமைச் செயலகத் தில் அமைச்சர்கள் அறை யில் திடீர் மின்வெட்டு ஏற் பட்டுள்ளது. திடீர் மின்வெட்டால் அமைச்சர் கள் செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா அறை இருளில் மூழ்கியது. முதல மைச்சர், அமைச்சர்கள் அறை உள்ள பிரதான கட் டடம் முழுவதும் மின் வெட்டால் பாதிப்பு ஏற்பட் டுள்ளது.

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக மின்வெட்டு பிரச்சினை அதிகரித்துள் ளது. அறிவிக்கப்படாத மின்வெட்டால் கடும் அவ தித்கு உள்ளாகி வரும் பொதுமக்கள், சில இடங்க ளில் போராட்டத்தில் ஈடுபட் டனர். அமைச்சர்கள் பங் கேற்ற நிகழ்ச்சிகளில் கூட மின்வெட்டு ஏற்படுவது தொடர்கதையாகி வந்தது. தமிழகத்தில் மின்பற்றாக் குறையை சமாளிக்க கூடு தலாக 4,500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய தமிழக மின்வாரியம் டெண்டரும் விட்டுள்ளது. பருவநிலை மாறுபாடு மற்றும் காற் றாலை மின் உற்பத்தி சரிவு போன்றவற்றால் மின் பிரச்சினை அதிக ரித்து இருப்பதாக அதிகாரி கள் வட்டாரத்தில் சொல்லப் படுகிறது.

தொடர்ச்சியாக ஏற்படும் மின்வெட்டு காரணமாக கடும் அவதி அடைவதால், இந்தப் பிரச்சினைக்கு உட னடியாக அரசு தீர்வு காண வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இந்த நிலையில், தலை மைச் செயலகத்தில் அமைச்சர்கள் அறையி லேயே இன்று திடீர் மின் வெட்டு ஏற்பட்டது பரப ரப்பை ஏற்படுத்தியுள்ளது. திடீர் மின்வெட்டால் அமைச்சர்கள் செங்கோட் டையன், ஆதவ் அர்ஜுனா அறை இருளில் மூழ்கியது. அமைச்சர்கள் அறை உள்ள முதல் தளம் முழுவ தும் மின்வெட்டு ஏற்பட் டது. இந்தத் திடீர் மின் தடை எதனால் ஏற்பட்டது என்பது பற்றி மின்வாரிய ஊழியர்கள் ஆய்வு மேற் கொண்டு வருகிறார்கள்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தி.மு.க. வர்த்தக அணி தலைவர் சிப்ஸ் மணி அவர்கள் மறைவெய்தினார். அன்னாரின் உடலுக்கு தி.மு.க. மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட அமைப்பாளர் ஜெயராம் மார்த்தாண்டன், துணை அமைப்பாளர் செல்வகுமார் மற்றும் பலர் உள்ளனர்.